# தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டமும் தென்னிலங்கை அரசியலின் இயலாமையும்

கலாநிதி. விக்ரமபாகு கருணாரத்ன

இனங்களுக்கிடையே சமாதானத்துக்கான ஆய்வகம்

# தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டமும் தென்னிலங்கை அரசியலின் இயலாமையும்

**கலாநிதி.விக்ரமபாகு கருணாரத்ன**

இனங்களுக்கிடையே சமாதானத்துக்கான
ஆய்வகத்தினால் கொழும்பு சுகததாச
ஸ்போட்ஸ் ஹோட்டல் கேட்போர் கூடத்தில்
31.05.2005 இல் நடைபெற்ற ஆய்வரங்கில்
ஆற்றிய உரையின் தொகுப்பு

வெளியீடு:
இனங்களுக்கிடையே சமாதானத்துக்கான ஆய்வகம்

தலைப்பு

தமிழத் தேசிய விடுதலைப்போராட்டமும்

தென்னிலங்கை அரசியலின் இயலாமையும்

ஆசிரியர்

கலாநிதி.விக்ரமபாகு கருணாரத்ன

பதிப்பு

வைகாசி.2005

வெளியீடு

இனங்களுக்கிடையே சமாதானத்துக்கான ஆய்வகம்

143/4,கியூ வீதி கொழும்பு.02

தொலைபேசி.2430621–தொலைமடல்.2305963

மின்அஞ்சல்: recipe@visualnet.lk

Title

Tamil National Liberation struggle

and the Sri Lankan political crisis

Author

Dr.Vickramabahu Karunarathne

Date of Publication

May 2005

Published

Research Centre for Inter-Recial Peace (Receipe)

143/4,Kew Road Colombo.02

Tel. 2430621, Fax; 2305963

Email: receipe@visual .lk

# வெளியீட்டுரை

இனவாத சக்திகள் தென்னிலங்கையில் தமது தமிழர் விரோத பிரசாரங்களை மிக பரந்தளவில் மேற்கொண்டு வரும் காலகட்டத்தில் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன தனது தெளிவான நிலைப்பாட்டை மிக அழகாக வெளிப்படுத்தியுள்ளார்

இனங்களுக்கிடையே சமாதானத்திற்கான ஆய்வகம் வெளியிடும் நான்காவது நூலாக இந்நூல் இடம்பெறுகின்றது

மிக நீண்ட காலமாக இருள் சூழ்ந்துள்ள இந்நாட்டில் சமாதான ஒளியை ஏற்றும் முயற்சியில் எமது அமைப்பு மிக பெறுமதியான பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அதன் ஒரு அங்கமாக இந்நூல் இடம்பெறுகின்றது.

கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன தமிழ் மக்கள் மத்தியில் அதிகம் நேசிக்கப்படும் ஒரு தலைவராவர் இவரின் கருத்துக்கள் நிச்சயமாக சகல இனமக்களாலும் அறியப்படவேண்டும் என்பதே இனங்களுக்கிடையே சமாதானத்துக்கான ஆய்வகத்தின் விருப்பமாகும்

நடராசா. ஜனகன்
இணைச் செயலாளர்
இனங்களுக்கிடையிலான சமாதானத்துக்கான ஆய்வகம்
143 / 4,கீயூ வீதி கொழும்பு.02,

# முகவுரை

நாட்டின் அரசியலும் பொருளாதாரமும் ஒரே இடத்தில் தேங்கிக் கிடப்பதாக சில அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். தனிமைப்படுத்தபட்டிருக்கும் லிபரல் அரசியல் விமர்சகர்களின் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது அது அப்படித் தென்பட முடியும். இன்று அரசியல் அரங்கில் முன்னணிக்கு வந்திருக்கும் வடக்கு கிழக்கு "பொதுக் கட்டமைப்பை" செயற்படுத்துவது தொடர்பான கோரிக்கை எமது வரலாற்றில் எடுத்து வைக்கப்பட்ட மிகவும் துணிச்சலான ஒரு முன்னோக்கிய அடியாக இருந்து வருகின்றது. எனினும், இதற்கு பிரதானமாக பொறுப்புக் கூற வேண்டியவராக இருந்து வரும் ஜனாதிபதி 10 சதவீதத்துக்கும் குறைவான வாக்கு வங்கியை பிரதிநிதித்துவம் செய்யும் ஜே.வி.பி. மற்றும் ஹெலஉருமய ஆகிய கட்சிகளின் பொதுக் கட்டமைப்பு எதிர்ப்புக் கோஷங்களுக்கு மத்தயில் திகைத்துப் போயுள்ளார். எல்லா இடங்களிலும் அவர் இச்சக்திகளை பலமாக கண்டித்து வந்த போதிலும் இது குறித்து இன்னமும் அவரால் உறுதியான ஒரு முன்னெடுப்பை மேற்கொள்ள முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் அவர் வெறுமனே வாய்ச் சவடால் விட்டுக் கொண்டிருப்பது நடு இரவில் மயானமொன்றைக் கடந்து செல்லும் ஒரு நபர் பேய் பிசாசுகளுக்குப் பயந்து உரத்துக் குரல் கொடுத்துக் கொண்டு செல்வதற்கு இணையானதாக இருந்து வருவது போல் எவருக்கும் தோன்ற முடியும். பேய் பிசாசுகள் குறித்து தனக்கு இருக்கும் அச்சத்தை மறைத்துக் கொள்வதற்கான ஒரு முயற்சியையயே அது பிரதிபலிக்கின்றது. நாட்டு மக்களில் சுமார் 90 சதவீதத்தினர் கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேல் தமிழ் மக்களுக்கு ஓரளவுக்கு சுய நிர்ணய உரிமையை வழங்கும் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக வாக்களித்து வந்துள்ளனர். அத்துடன், இடதுசாரி இயக்கங்களைச் சேர்ந்தவர்களும், தொழிலாளர் வர்க்க அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும், லிபரல் அறிவுஜீவிகளும் தமிழர்களின் சுய நிர்ணய உரிமைக்கு ஆதரவளித்து வருகின்றனர். இவ்விதம் தமக்குக் கிட்டி வரும் ஆதரவைப் பயன்படுத்தி நிலையான ஒரு தீர்வை எடுத்து வர முடியாத நிலையிலிருந்து வரும் இத்தகைய தலைவர்கள் எப்பொழுதும் இனவாத அழுத்தங்களுக்கு தலைவணங்குபவர்களாகவே இருந்து வருகின்றனர்.

தமிழ் விடுதலைப் போராட்டத்தினால் நிலைகுலைந்து போயிருக்குப் சிங்கள பௌத்த அரசை மீண்டும் இனவாத அடிப்படையில் கட்டியெழுப்புவதற்கான மிகவும் சக்தி வாய்ந்த ஒரு போர் அணி திரட்டல் இப்பொழுது இடம்பெற்று வருகின்றது. இச்செயற்பாடு இன்று உலக மக்களினாலும் அதே போல பெரும்பாலான இலங்கை மக்களினாலும் வெறுப்புடன் நோக்கப்பட்டு வருகின்றது. அதன் பிரகாரம் முதலாளித்துவ ஜனநாயக வழியில் அல்லது சமஷ்டிக் கோட்பாட்டின் அடிப்படையிலான ஐக்கிய அரச கட்டமைப்பொன்றின் வழியில் பயணிப்பது இன்றைய முதலாளித்துவ வர்க்கத்தின் தேவையாக உள்ளது. அதன் அடிப்படையில் உலக முதலாளித்துவத்தின் திட்டங்களின் பிரகாரம் நாட்டை ஓர் அபிவிருத்திப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதே அவர்களின் தேவையாக இருந்து வருகின்றது. இந்த அபிவிருத்திப் பாதையில் பயணித்தால் இலங்கை 8.5 சதவீத பொருளாதார வளர்ச்சியை சாதித்துக் கொள்ள முடியும் என உலக வங்கி கூறுகிறது. சிங்கள பௌத்த ஒற்றை அரசை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு எத்தனித்து வரும் இனவாதச் சக்திகளை எதிர்கொண்டு நாம் முன்னோக்கிப் பயணிப்பதற்கு இடதுசாரி சக்திகளையும், தொழிலாளர் வர்க்க அமைப்புக்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால் முதலாளித்துவத்தின் திட்டங்களை நாங்கள் புறமொதுக்க வேண்டியுள்ளது. உலக முதலாளித்துவத்துடன் மோதல்களை நடத்திக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஓர் இடதுசாரிப் பயணத்திற்கு நாங்கள் எங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனை இன்றைய இலங்கையின் முதலாளித்துவத் தலைமைத்துவத்தினால் சீரணிக்க முடியாதுள்ளது. அவ்வாறு இல்லாவிடில் ரணில் - சந்திரிக்கா இணக்கப்பாடு ஒன்றுடன் பாராளுமன்ற மட்டத்தில் இப்பிரச்சினையை தீர்த்துக் கொள்ள வேண்டும். இந்த விடயம் தொடர்பாக இவ்விருவரினதும் கட்சிகளுக்கிடையில் ஒரு கொள்கை ரீதியிலான வேறுபாடு இருந்து வரவில்லை. ஆனால், இக்கட்சிகளைச் சேர்ந்த பிரதான தலைவர்களினதும், சாதாரண தலைவர்களினதும் தனிப்பட்ட செயல்திட்டங்களே இதற்கு இடையூறு விளைவித்து வருகின்றன. சந்திரிக்கா தனது அரசியல் எதிர்காலம் குறித்து அச்சம் கொண்டுள்ளார். ரணில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரச்சாரத்தை இப்பொழுது ஆரம்பித்துள்ளதுடன், கிராமங்களுக்கு குடிசை வாழ் மக்களை தேடிச் செல்கிறார். மகிந்த ராஜபக்ஷ எதிர்காலத்தில் ஜனாதிபதி வேட்பாளராக முன்வருவதில் தான் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்

தடங்கல்களை வெற்றி கொள்ளும் பொருட்டு இனவாத ஜே.வி.பி. யின் பின்னால் சென்று கொண்டிருக்கின்றார்.

இலங்கையின் முதலாளித்துவ வர்க்கத்தைச் சேர்ந்த இத்தலைவர்கள் தமது சுய நல வேட்கைகள் காரணமாக வேறு எதனையும் பார்க்க முடியாத குருடர்களாக இருந்து வருகின்றனர். மறுபுறத்தில், பொருளாதார அடிமைத்துவம், உறுதியான ஒரு கொள்கையின்மை, மற்றும் நேர்மையீனம் போன்ற அனைத்து விதமான கேடுகளினாலும் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இத்தகைய நபர்கள் இன்று இலங்கையின் அரசியல் அரங்கில் நடித்து வரும் நாடகங்களைப் பார்த்து இந்நாட்டு அரசியலை விமர்சிக்கும் பொழுது முன்னர் கூறியது போல நாடு ஒரே இடத்தில் தேங்கிக் கிடப்பது போல் தென்பட முடியும்.

ஆனால், உண்மையிலேயே நிலைமை அவ்வாறு உள்ளதா? நீர் கொதிக்கும் வரையில் ஆட்டம் போடும் நண்டுகளைப் போலவே அவர்கள் இருந்து வருகின்றனர். இந்த நாடகங்கள் இவ்வாறு இடம்பெற்று வரும் அதே வேளையில், சமூகத்தின் அடிமட்டத்தில் மக்கள் இயக்கங்கள் தோன்றி வருகின்றன. இனவாதச் சக்திகள் இடதுசாரித் தலைவர்களுக்கும் அதே போல லிபரல் தலைவர்களுக்கும் நேடியாக மரண அச்சுறுத்தலை முன்வைத்து வருகின்றன. சிவராம் அந்த கொலைத் தொடரின் முதலாவது நபராவார் என இக்கொலைக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்பவர்கள் கூறி வருகின்றனர். இந்நிலைமைக்கு நேர்மாறான விதத்தில் வடக்கு கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து வரும் பிரதேசங்களில் தமிழ் மக்களும் அதே போல முஸ்லிம் மக்களும் இந்தக் கட்டுப்பாட்டின் நேரடியான அழுத்தத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். இராணுவக் கட்டுப்பாடு காரணமாக மக்களின் அன்றாட சீவனோபாய நடவடிக்கைகள் நாளுக்கு நாள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன. இவற்றை எதிர்த்து அண்மைக் காலத்தில் பல்வேறு இடங்களில் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றிருந்தன. இந்த சம்பவங்களை அறிக்கையிடும் தென்னிலங்கையின் பெரும்பாலான முதலாளித்துவ ஊடகங்கள் இத்தகைய மக்கள் ஆர்ப்பாட்டங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தூண்டுதலின் பேரில் இடம்பெற்று வருபவை என்பதைக் காட்டுவதற்கே முயற்சித்துள்ளன. முன்னர் கூறிய

சுயநலவாத தலைமைகளின் பிரச்சார நடவடிக்கைகளை பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் இத்தகைய ஊடகவியலாளர்களிடமிருந்து நாங்கள் வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாது.

ஆனால், இன்றைய யதார்த்த நிலை என்னவென்றால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மூன்று வருட காலமாக அமுல் செய்யப்பட்டு வந்திருந்த போதிலும் மக்களுக்கு அதன் மூலம் எத்தகைய பயன்களும் கிட்டியிருக்கவில்லை என்பதாகும். அதன் காரணமாக அவர்கள் இப்பொழுது தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் பொறுப்பினை தாமே தமது கைகளில் எடுத்து வருகின்றனர். இவர்கள் முன்னொரு காலத்தில் தமது இனத்தின் முதலாளித்துவ பிரபுக் குல தலைவர்கள் பாராளுமன்ற பேராட்டங்கள் மூலம் தமக்கு சலுகைகளை எடுத்து வரும் வரையில் காத்திருந்தனர். அதன் பின்னர் தமது பிள்ளைகள் ஆயுதமேந்திய போது இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு கிட்டும் என அவர்கள் நம்பினார்கள். ஆனால், இப்பொழுது நாங்களே எமது பிரச்சினையை கையில் எடுத்து அதற்கு ஒரு தீர்வினைத் தேடிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் மக்கள் முன்வருவதனை பார்க்க முடிகிறது. தோட்டத் தொழிலாளர்கள் மேல் கொத்மலை திட்டத்துக்கு எதிராக மேற்கொண்டு வரும் ஆர்ப்பாட்டங்களையும் இந்த அனுபவம் ஊர்ஜிதம் செய்கின்றது. மேல் கொத்மலை திட்டத்தினால் அழிவுறும் தமது வாழ்க்கை தொடர்பான பிரச்சினையை பாரம்பரியத் தலைவர்கள் அமைச்சுப் பொறுப்புக்களுக்காக காவு கொடுத்து வருவதைப் பார்த்து வரும் மக்கள் இப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்காக தாமே களத்தில் இறங்க வேண்டும் என இப்பொழுது முடிவு செய்துள்ளனர். ஜே.வி.பி. அல்லது ஹெல உரிமய போன்ற கட்சிகளின் தேசப் பற்று என்னவாக இருந்த போதிலும், அவர்களுடைய இனவாத அரசியல் உலக முதலாளித்துவத்தின் திட்டங்களுக்கு எதிரானது அல்ல என்பதனை இப்பொழுது தொழிலாளர் வர்க்கத்தினர் புரிந்து கொண்டுள்ளனர். மேலும், உலக முதலாளித்துவத்தின் மூலம் உழைக்கும் வர்க்கத்தினர் மீது தொடுக்கப்பட்டு வரும் சமூகத் தாக்குதல்களுக்கு எதிராக இச்சக்திகள் எழுப்பி வரும் கோஷங்கள் தமது இனவாத அரசியல் செயல்திட்டத்தின் சார்பில் முதலாளித்துவ ஆட்சியாளர்களுடன் பேரம் பேசுவதற்காக மட்டுமே எழுப்பப்பட்டு வருகின்றன என்பதனையும் உழைக்கும் வர்க்கத்தினர் இப்பொழுது புரிந்து கொண்டுள்ளனர். இது மிக முக்கியமான ஒரு விடயமாகும்.

இந்த அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்தின் சுதந்திரமான ஓர் ஆர்ப்பாட்ட நிலையம் இப்பொழுது கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது. இந்த மக்கள் எழுச்சியின் போக்கு உடனடி எதிர்காலத்தில் நாட்டின் அரசியல் நிலைமைகளில் நிர்ணயகரமான மாற்றங்களை எடுத்து வர முடியுமா என்ற கேள்விக்கு திட்டவட்டமாக பதிலளிக்க முடியாவிடினும், அது காலப் போக்கில் ஒரு நிர்ணயகரமான சக்தியாக எழுச்சியடைய முடியும் என எதிர்பார்க்கலாம்.

சமூகத்தின் அடித்தளத்தில் ஏற்பட்டு வரும் இந்த பிரவாகங்கள் ஓர் பாரிய அலையைப் போல இன்னமும் தெளிவாக கண்ணுக்குப் புலப்பட வில்லையானாலும் கூட அவை எடுத்து வரும் அழுத்தங்கள் இந்த சுயநலத் தலைவர்களின் திட்டங்களை அம்பலப்படுத்தும். அதன் காரணமாக இந்த சமூகப் பிரவாகத்தை ஒடுக்குவதற்கு இனவாதச் சக்திகள் துரிதமாக சூழ்ச்சிகளில் ஈடுபட்டு வருவதனை காண முடிகிறது.

தோழர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன இச்சிறு நூலின் மூலம் முன்வைக்கும் பகுப்பாய்வுச் சாராம்சம் சமூகத்துக்குள்ளே இன்று இடம்பெற்று வரும் அசைவுகள், அதன் விளைவாக சமூகத்துக்கு வெளியில் உருவாகி வரும் அரசியல் அணி திரட்டல்கள் மற்றும் மோதல்கள் என்பவற்றை மிகவும் நுட்பமாக எடுத்துக் காட்டுகின்றது. நிகழ்வுகள் மிக வேகமாக இடம்பெற்று வருகின்றன. ஓர் அணி திரட்டலை தலைகீழாக்கி விட்டு மற்றோர் அணி திரட்டல் முன்னணிக்கு வருகின்றது. நாட்டில் உண்மையில் இப்பொழுது என்ன இடம்பெற்று வருகின்றது என்பதனைச் சரிவரப் புரிந்து கொள்வதற்கு கலாநிதி விக்ரமபாகு அவர்களின் இக்கருத்துக்கள் மிகச் சிறந்த ஒரு கோட்பாட்டுப் பின்னணியை உங்களுக்கு வழங்கும் என எதிர்பார்க்கிறோம்.

**ரணத் குமாரசிங்க**
**தலைவர்**
**இனங்களுக்கிடையிலான சமாதானத்துக்கான ஆய்வகம்**
**143 / 4, கீயூ வீதி கொழும்பு.02,**

# தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டமும் தென்னிலங்கை அரசியலின் இயலாமையும்

-கலாநிதி.விக்ரமபாகு கருணாரத்ன-

### சுனாமி மற்றும் சர்வதேச தலையீடுகள் என்பவற்றின் பொருள்

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதனை அடுத்து மனித உணர்வுகளில் ஒரு பாரிய அளவிலான மறுமலர்ச்சி ஏற்பட்டது. இன, மத பேதமின்றி மக்கள் அனைவரும் ஒன்றாகக் கைகோர்த்து ஒருவருக்கொருவர் உதவுவதற்கு முன்வந்தார்கள். ஒவ்வொரு மனிதரும் ஒட்டுமொத்த மனிதநேயத்துக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் போல செயற்பட்டு வந்தார்கள். இது இந்நாட்டில் மட்டுமன்றி உலகம் முழுவதும் பரவலாக காணப்பட்ட ஒரு கருத்தாகும். அதன் காரணமாக அனைத்து நாடுகளைச் சேர்ந்த ஆட்சியாளர்களும் பொய்யாகவேனும் மனிதநேயம் குறித்துப் பேச வேண்டிய ஒரு நிலைமை தோன்றியது. ஆரம்பத்தில் அமெரிக்கா இதற்கென ஒரு சிறு தொகையையே ஒதுக்கியிருந்தது. ஆனால், உலகெங்கிலும் தோன்றிய நிவாரண அலைக்கு மத்தியில் அந்த நாடு ஒரு பாரிய நிர்ப்பந்தத்தை எதிர்கொண்டது. அது மட்டுமன்றி இச்சந்தர்ப்பத்தில் இந்நாடுகளுக்கு உதவி வழங்கும் சாக்கில் அவற்றுக்குள் ஊடுருவிக் கொள்ள முடியும் என்ற விடயத்தையும் அமெரிக்கா புரிந்து கொண்டது. அமெரிக்க இராணுவத்தையும், நிவாரண உதவிக் குழுக்களையும் எல்லா இடங்களுக்கும் அனுப்பி வைக்க முடியும் என்ற விடயத்தையும்

அவர்கள் நன்கு புரிந்து கொண்டார்கள். அந்த நிலையில் அனைத்து இடங்களுக்கும் பிரவேசிக்கும் பொருட்டு அனுதாபத்துடன் கூடிய ஒரு முகத்தை வெளி உலகுக்குக் காட்டுவதற்கு அமெரிக்கா முன்வந்தது. ஆனால், இந்தியா மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளில் இதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. எமது நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு அவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. அதற்கு ஊடாக இந்நாட்டில் செயற்படுத்தப்பட முடியாதிருந்த பொருளாதார யோசனைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அமெரிக்கா முயன்றது. முன்னைய அரசாங்கம் "இலங்கையில் மீண்டும் மறுமலர்ச்சி" என்ற தலைப்பில் இந்த உலகளாவிய முதலாளித்துவத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டத்துக்கே செயல்வடிவம் கொடுத்திருந்தது. இந்த வேலைத்திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஆரம்பத்தில் இந்த அரசாங்கம் முயற்சி செய்த போதிலும் சுனாமியின் பின்னர் மேலைத்தேய வல்லரசுகளின் கருத்துக்களுக்கு அது பெருமளவுக்கு அடிபணிந்துள்ளது என்பதனை காண முடிகிறது. இன்று அவர்கள் "நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம்" என்ற பெயரில் ஒரு திட்டத்தை முன்வைத்துள்ளார்கள். இது அன்று ரணில் முன்வைத்திருந்த அதே திட்டம்தான். அது மட்டுமன்றி இதுவரையில் ஒரு போதும் அமெரிக்க இராணுவத்தை இங்கு எடுத்து வந்திராத இந்நாடு சுனாமி நிவாரண நடவடிக்கைகளின் கீழ் அமெரிக்க படையணி ஒன்றையும் நாட்டுக்குள் எடுத்து வந்திருந்தது. அதன் பிரகாரம் இனிமேல் எந்தவொரு நேரத்திலும் உதவி வழங்குவதற்கு எனக் கூறி அமெரிக்க இராணுவத்தை இங்கு எடுத்து வர முடியும். இந்த இராணுவத்தில் பெரும்பாலானவர்கள் திரும்பிச் சென்றுள்ள போதிலும் இங்குள்ள அமெரிக்க தூதுவராலயத்தில் புறம்பான ஒரு இராணுவ அலகு அமைக்கப்பட்டுள்ளது. இன்று அதி நவீன கணனித் தொழில்நுட்பம் செயற்பட்டு வரும் ஓர் உலகில் ஒரு நாட்டுக்குள் வெளி நாட்டு இராணுவம் ஒன்று இருந்து வருகின்றது என்பதன் பொருள் அந்நாட்டுக்குள் ஒரு பாரிய படையணி அல்லது போர் கப்பல் இருந்து வருகின்றது என்பது மட்டுமல்ல. உயர் தொழில்நுட்ப செயற்பாடுகளைக் கொண்ட ஒரு சிறிய நிலையம் இருப்பது போதுமானதாகும். ஒரு சில நிமிட நேரங்களில் படையணிகளை வரவழைத்துக் கொள்ள முடியும். அந்த வகையில் பார்க்கும் பொழுது இப்பொழுது அமெரிக்க படை எமது நாட்டுக்குள் நிரந்தரமாக இருந்து வருகின்றது என்பதனையே காண முடிகிறது. அதன் காரணமாக அமெரிக்க இராணுவ உதவிகளும் இப்பொழுது அதிகரித்துள்ளன.

சுனாமியை அடுத்து மனிதாபிமானம் தலைதூக்கியது என்பது உண்மைதான். ஆனால், அதனுடன் இணைந்த விதத்தில் எமது இயலாமையை பயன்படுத்தி எம்மை விழுங்க முயலும் அரக்கர்களும் வெளியில் வந்துள்ளார்கள். முன்னர் இது கிராம மட்டத்தில் ஆங்காங்கே தென்பட்டது. இப்பொழுது சர்வதேச ரீதியில் நிவாரண உதவிகளுக்குப் பின்னால் இந்த அரக்கர்களும் எமது நாட்டுக்குள் கால்' பதித்துள்ளார்கள்.

### சுனாமியை ஓர் அரசியல் ஆயுதமாக பயன்படுத்துவதற்கான முயற்சி

உலக முதலாளித்துவம் இந்நாட்டில் பணத்தை முதலீடு செய்வதற்கு முன்னர் அது தனக்கு இலாபகரமானதாக இருக்குமா என்பதனை பார்க்கும். அப்படி இலாபகரமானதாக இருந்தால் மட்டுமே அது முதலீடுகளை மேற்கொள்ளும். இந்நாட்டில் தொடர்ந்து போர் இடம்பெற்று வருவதனை ஒட்டுமொத்த உலக முதலாளித்துவம் விரும்புவதில்லை. ஏனென்றால் அத்தகைய ஒரு சூழல் முதலீட்டுக்கு உசிதமானதாக இருப்பதில்லை. யுத்தத்தின் மூலம் ஆயுத வியாபாரிகளுக்கு மட்டுமே இலாபம் கிடைக்கின்றது. ஏனைய முதலீட்டாளர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வர்த்தக நிலையம் என்பன இப்பொழுது உலக முதலாளித்துவத்தின் நிர்வாக அமைப்புக்களாக செயற்பட்டு வருகின்றன. அவை இத்தகைய போர் நிலைமைகளை எந்த வகையிலும் வரவேற்பதில்லை. இந்த நிறுவனங்கள் உலகளாவிய முதலாளித்துவத்தின் பொதுவான பயணத்துக்கு உத்தரவாதம் வழங்கும் நிறுவனங்களாக இருந்து வரும் நிலையில், அந்தந்த வியாபாரிகளின் தேவைகள் குறித்து அவை பொருட்படுத்துவதில்லை. எனவே, ஆயுத வியாபாரிகளின் தேவைகளுக்கு பதிலாக பொதுவில் பல்தேசிய நிறுவனங்களின் கண்ணோட்டத்தின் பின்புலத்தில் நோக்கும் பொழுது இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ஓரளவுக்கேனும் ஒரு தீர்வை எடுத்து வர வேண்டும் என்பதே அவற்றின் நிலைப்பாடாக இருந்து வருவதனை காண முடிகிறது. அது தொடர்பாக முதலீடுகளை மேற்கொள்வதற்கு அந்நிறுவனங்கள் தயாராக இருந்து வருகின்றன. ஏற்கனவே அவை கணிசமான அளவிலான தொகைகளை செலவிட்டுள்ளன. முதலாளித்துவ அபிவிருத்தியே அவற்றின் இலக்காகும். இனப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வது அதற்கான

ஒரு முன் நிபந்தனையாக இருந்து வருகின்றது. பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றியமைப்பது குறித்த ஒரு யோசனையையும், அதே போல ஓர் அரசியல் யோசனையையும் அவர்கள் முன்வைத்துள்ளார்கள். இந்நாட்டின் அரசியலை ஜனநாயகமயமாக்கிக் கொள்ளும் சாக்கில் அரச அடக்கு முறையை பலப்படுத்திக் கொள்வதற்கு அவர்கள் மற்றொரு அரசியல் நிபந்தனையை முன்வைத்துள்ளார்கள். ஆனால், இப்பொழுது அதனையும் மீறி இனப் பிரச்சினையை தீர்க்கும் விடயத்தை தமது முதன்மையான நிபந்தனையாக அவர்கள் வலியுறுத்தி வருகின்றார்கள். இந்தச் சூழ்நிலையில் இந்த அரசாங்கம் உதவியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு இரு முன் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. ஒன்று "மறுசீரமைப்பு"; அடுத்தது இனப் பிரச்சினைக்கான தீர்வு. இதன் பிரகாரம் சந்திரிக்கா இப்பொழுது ஒரு மாபெரும் தந்திரத்தை கையாண்டு வருகின்றார். ஒரு புறத்தில் பொருளாதாரக் கட்டமைப்பை மறுசீரமைக்கும் திட்டத்தின் கீழ் அரச சொத்துக்களை தனியார்மயமாக்கும் பாதையில் நடை போடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் கீழ் தொழில் சட்டங்கள், சுற்றுச் சூழல் சட்டங்கள் மற்றும் அரச துறை தொடர்பான "முகாமைத்துவ" சட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு இப்பொழுது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் அன்று ரணில் முன்வைத்த பொருளாதாரக் கட்டமைப்பின் கூறுகளாக இருந்து வருகின்றன என்பது தெளிவாகும். தொழில் சட்டங்களை திருத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சிகள் இதனை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. அது மட்டுமன்றி அவசர கால சட்டத்தின் கீழ் வேலை நிறுத்தங்களை தடுத்து நிறுத்துவதற்கும் இப்பொழுது அவர்கள் திட்டங்களை தீட்டி வருகின்றார்கள். அது தொடர்பாக சவால்களையும் முன்வைத்து வருகின்றார்கள். மறுபுறத்தில், அதன் அடிப்படையில் வெகு விரைவில் புலிகள் இயக்கத்துடன் இணைந்து வடக்கு கிழக்கில் சுனாமி நிவாரணப் பணிகளுக்கென ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கிக் கொள்வதற்கும் அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. இந்த அடிப்படையில் அதிகாரப் பகிர்வு வேலைத்திட்டம் ஒன்று குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு சந்திரிக்கா விரும்புகின்றார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் நோக்கும் பொழுது மக்கள் விடுதலை முன்னணியுடன் ஒரு மோதல் பாதையில் செல்வதற்கு அவர் தயாராக உள்ளார் என்பதனையே காண முடிகிறது. நோர்வே பிரதிநிதிகளை இலங்கைக்கு அழைத்து, அவர்களுக்கு பெருமளவுக்கு

வசதிகளை வழங்கி, அது தொடர்பாக பாரிய அளவில் பிரச்சாரமும் மேற்கொள்ளப்படுகின்றது. அரச ஊடகங்கள் இப்பிரச்சாரத்தினை விரிவான அளவில் முன்னெடுத்துச் செல்கின்றன. குறிப்பாக ஆங்கில மற்றும் தமிழ் ஊடகங்களுக்கு ஊடாக இது குறித்து உரத்துக் குரலெழுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவை இரண்டும் சுனாமியின் பின்னர் ஏற்பட்டிருக்கும் புதிய விடயங்களாகும்.

## தனியார்மயமாக்கலுடன் சமஷ்டி ஆட்சி முறை

அமெரிக்காவை உள்ளிட்ட வல்லரசு நாடுகளால் வழங்கப்படும் உதவிகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே இப்பொழுது சந்திரிக்காவின் முக்கியமான அபிலாஷையாக இருந்து வருகின்றது. அதனைத் தவிர்த்தால் புரட்சிகர மார்க்கம் மட்டுமே அவருக்கு எஞ்சியுள்ளது. அப்படியானால் அவர் கஸ்ட்ரோ – சாவேஸ் - லூலா ஆகியோர் பயணிக்கும் வழியில் தனது பயணத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அவர் இப்பொழுது முதலாளித்துவ வர்க்கத்தின் தலைவியாக தன்னை உருவாக்கிக் கொண்டு வருகின்றார். அதன் காரணமாக இந்த மார்க்கத்தில் பயணிப்பதற்கு அவருக்கு எத்தகைய திராணியுமில்லை. முதலாளித்துவ வர்க்கத்தின் மிகவும் நம்பகமான தலைவியாக எழுச்சியடைவதற்கே அவர் இப்பொழுது முயன்று கொண்டிருக்கின்றார். அந்தப் பின்னணியில் ரணிலின் கொள்கைகளை ரணிலை விடவும் பார்க்க சிறந்த விதத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு அவர் மேற்கொண்டு வரும் முயற்சிகளை தெளிவாக பார்க்க முடிகின்றது. எந்த விதமான கூச்சமும் இல்லாமல் அவர் தனது கொள்கைகளை மாற்றிக் கொண்டுள்ளார். ஒரு புறத்தில் தனியார்மயமாக்கல் மற்றும் தொழிலாளர் அடக்கு முறை என்பவற்றை வலியுறுத்தி வரும் அவர், மறுபுறத்தில் சமஷ்டி ஆட்சி முறையை வலியுறுத்தி வருகின்றார். இந்த வகையில் உலக வல்லரசுகளின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் நம்பிக்கையையும் வென்றெடுப்பதற்கு அவர் பெருளவுக்கு முயன்று வருகின்றார். உண்மையிலேயே உயர் முதலாளித்துவ வர்க்கத்தைச் சேர்ந்த அனைத்து பிரிவினரும் சந்திரிக்காவின் இந்தப் புதிய செயல்பாட்டுக்கு தமது ஆசிர்வாதங்களை வழங்கியுள்ளார்கள். தமிழ் மற்றும் முஸ்லிம் முதலாளித்துவ தலைவர்களும் கூட இப்பொழுது அவருடைய புதிய பயணம் குறித்து தமது பாராட்டுதல்களை தெரிவிக்கத் தொடங்கியுள்ளார்கள். அவரை வணங்கி வாழ்த்தவும் தலைப்பட்டுள்ளார்கள். தமிழ், முஸ்லிம்

முதலாளித்துவ வாதிகள் கடந்த காலத்தில் செயல்பட்டிருக்கும் விதத்தை பார்க்கும் பொழுது அவர்கள் உலக வல்லரசுகளின் செயல்பாடுகளின் பால் மிக நெருக்கமாக கவர்ந்திழுக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை பார்க்க முடிகிறது. உயர் மட்ட தமிழ் முதலாளித்துவவாதிகளின் ஒரே அபிலாஷை இனப் பிரச்சினைக்கு அமெரிக்காவின் அனுசரணையுடன் கிடைக்கும் தீர்வைப் பெற்றுக் கொள்வதாகும். அதன் பொருட்டு புலிகள் இயக்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்கும் அவர்கள் தயாராக இருந்து வருகின்றார்கள் என்பதனை ஆனந்தசங்கரி போன்றவர்களின் செயல்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன. முஸ்லிம் காங்கிரஸ் திறந்த பொருளாதரக் கொள்கைகளை பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளும் ஒரு கட்சி. அக்கட்சி அமெரிக்கா தொடர்பான தனது நட்புணர்வையும் வெளிக்காட்டி வருகின்றது. அந்த அடிப்படையில் அக்கட்சி மத்திய கிழக்கு மன்னர்கள் மற்றும் இளவரசர்கள் ஆகியோருக்கு சார்பாக செயற்பட்டு வரும் ஒரு கட்சியாக உள்ளது என்று கூறுவதில் தவறேதுமில்லை. அதன் காரணமாக அக்கட்சியின் உதவியைப் பெற்றுக் கொள்வது சந்திரிக்காவுக்கு ஒரு கஷ்டமான காரியமாக இருக்கப் போவதில்லை.

## ரணில் எதிர்கொள்ளும் தடுமாற்ற நிலை

சந்திரிக்கா முதலாளித்துவ வேடம் தரித்திருக்கும் காரணத்தினால் ஐக்கிய தேசிய முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் பெரும் சங்கடங்களை எதிர்நோக்கியுள்ளன. சந்திரிக்காவின் கொள்கைகள் தவறானவை என இப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியால் சுட்டிக் காட்ட முடியாது. ஏனென்றால் அவை ஐக்கிய தேசியக் கட்சி முன்னர் செயற்படுத்திய கொள்கைகளாகவும், இப்பொழுது முன்னெடுத்துச் செல்லும் கொள்கைகளாகவும் இருந்து வருகின்றன. அரசாங்கம் அவர்களுக்கு இழைத்திருக்கும், இழைத்து வரும் அநீதிகள் குறித்து மட்டுமே இப்பொழுது அவர்களால் பேச முடியும். ஆனால் அதன் மூலம் மக்கள் இன்று எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு எவ்வித தீர்வும் கிட்டப் போவதில்லை. ரணில் சந்திரிக்காவிலும் பார்க்க நல்ல செயற்பாட்டாளர் அல்லது ஆற்றல் மிக்க ஆட்சியாளர் என்ற சுலோகத்தை மட்டும் முன்வைத்து இப்பொழுது அவர்களால் தமது எதிர்கால பயணத்தை முன்னெடுக்க முடியாதுள்ளது. உண்மையிலேயே இந்த காரணத்தினால் அக்கட்சிக்குள் பெரும் மோதல்கள் உருவாகியுள்ளன. விலைவாசி உயர்வு குறித்து ஐக்கிய தேசியக்

கட்சி பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து வந்த போதிலும் சந்திரிக்காவின் சமூக அரசியல் வேலைத்திட்டம் மாற்றியமக்கப்பட வேண்டும் என குரலெழுப்பக் கூடிய நிலையில் அது இருந்து வரவில்லை. இப்பொழுது ஒரு சில சந்தர்ப்பங்களில் இனவாதிகளை தூண்டிவிடும் கைங்கரியங்களிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். மீண்டும் ஒரு போருக்கு தயாராக வேண்டும் என ஒரு சில தலைவர்கள் சில சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி வந்துள்ளார்கள். அதே வேளையில், இன்னொரு பிரிவினர் சந்திரிக்காவின் பக்கம் செல்வதற்கு ஆயத்தமாக இருந்து வருவதனையும் காண முடிகிறது. ஓர் அரசாங்க மாற்றத்தை எடுத்து வரக் கூடிய ஆற்றல் ரணிலிடம் இல்லாதிருந்தால் அவரிடம் தொடர்ந்து தரித்திருக்க வேண்டிய அவசியம் முதலாளித்துவ தலைவர்களுக்கு இருந்து வரவில்லை. மறுபுறத்தில், சந்திரிக்கா உலக முதலாளித்துவத்துடன் ஒட்டி உறவாடி, முன்னோக்கிப் பயணித்தால் அவர்களால் செய்யக் கூடிய வேறு காரியங்கள் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சி இன்று இந்த சிக்கல்களுக்குள் மாட்டி தவித்து வருகின்றது. ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டுவதே ரணிலின் இறுதித் துரும்புச் சீட்டாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே இப்பொழுது அவர் தன்னுடைய அனைத்துக் காரியங்களையும் நெறிப்படுத்தி வருகின்றார்.

## அப்பட்டமான இனவாதத்தில் இறங்கும் ஜே.வி.பி.

இதற்கிடையில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) இப்பொழுது ஒரு பாரிய பிரச்சினையை சந்தித்துள்ளது. சுனாமிக்கு முன்னர் அவர்கள் தாம் ஆட்சியில் இருப்பவர்களை போலவே நடந்து கொண்டார்கள். அதற்கு ஊடாக இராணுவ மற்றும் நிர்வாகத் துறைகளில் ஊடுருவி, உள்ளிருந்து ஒரு தேசாபிமான அரசைக் கட்டியெழுப்பும் சூழ்ச்சியில் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். தமது இந்த வேலைத் திட்டத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சக்திமிக்க ஒரு பிரிவினரையும் சேர்த்துக் கொண்டு முன்னோக்கிப் பயணிப்பதே அவர்களுடைய திட்டமாக இருந்தது. இந்தச் செயல்பாட்டின் வெளிப்பாடு தான் அல்லேகுணவன்ச தேரர் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட தேசாபிமான முன்னணி. சுனாமியின் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களை அடுத்து இந்த சூழ்ச்சி நடவடிக்கைகள் சிக்கல்களை எதிர்கொண்டன. விசேடமாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்குள் இருந்து வந்த ஜே.வி.பி. நேச சக்திகள் விலகிச் செல்லத் தொடங்கியுள்ளன. சிதறுண்டு போயிருக்கும் வெளி இனவாதச்

சக்திகளை ஒன்று திரட்டுவதில் இப்பொழுது அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். அதன் பிரகாரம் குணதாச அமரசேகர, நளின் சில்வா போன்ற நாடறிந்த இனவாதச் சக்திகளை இப்பொழுது அவர்கள் சேர்த்துக் கொண்டுள்ளார்கள். தற்போதைய அரசாங்கத்தை மேலும் வலுப்படுத்தி, பிற்போக்கு எதேச்சாதிகார ஆட்சி முறை ஒன்றை எடுத்து வருவதற்கே அவர்கள் முயன்று வருகின்றார்கள். அது இடதுசாரி முகமூடியுடன் கூடிய சிங்கள – பௌத்த பிற்போக்கு அரசொன்றாகும். இந்தப் பயணத்துக்கென அவர்கள் ஏற்கனவே கணிசமான அளவிலான சக்திகளை ஒன்று திரட்டிக் கொண்டுள்ளார்கள். இதில் முக்கிய கூறாக இருந்து வருவது கிராமிய பிரதேசங்களைச் சேர்ந்த படித்த சிங்கள இளைஞர் பிரிவினராகும். பல்கலைக்கழக மாணவர்கள் இந்தப் பின்னணியில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றார்கள். புரட்சிச் சதி முயற்சிகள் முன்னெடுக்கப்படும் சந்தர்ப்பங்களில் அடிப்படை செயற்பாடுகளை இந்த சிங்கள மாணவ அணியினரே முன்னெடுக்க வேண்டியுள்ளது என்பது ஒரு விடயமாகும். விடயத்தை 1971 மற்றும் 1988 / 89 ஆகிய கிளர்ச்சிகளின் போது தெரிய வந்தள்ள விடயங்களாகும். நாடு முழுதிலும் அமைந்துள்ள உயர் கல்வி நிறுவனங்களுக்கு உள்ளேயும் இளைஞர் படையணிகளை உருவாக்கிக் கொள்வதற்கு இப்பொழுது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனை காண முடிகிறது. கல்வியை தனியார்மயமாக்குவதற்கு எதிரான சுலோகங்களுடன் ஏனைய சுலோகங்களையும் சேர்த்து போராட்டங்களை குழப்பியடிப்பதற்கு அவர்கள் முயன்று வருகின்றார்கள். இத்தகைய போராட்டங்களில் எம்முடன் இணைந்திருக்கும் இடதுசாரி சக்திகள் செயற்படுவது இயல்பானதாகும். ஆனால். இந்த மாணவர் போராட்டத்தை ஒரு மக்கள் போராட்டமாக முன்னெடுத்துச் செல்லும் அவசியம் ஜே.வி.பி. க்கு இல்லை. அதற்கு பதிலாக பல்கலைக்கழங்களை மூடி, தம்முடன் இணைந்து கொள்ளும் செயல்வீரர்களை கெரில்லா முறையில் பயிற்றுவிப்பதே அவர்களுடைய எதிர்பார்ப்பாக உள்ளது. அதன் காரணமாக மாணவர்களுக்கிடையில் மோதல்களை தூண்டி, பல்கலைக்கழகங்களையும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களையும் மூடிவிடுவதற்கு அவர்கள் முயன்று வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு இப்பொழுது எழுந்துள்ளது.

## முதலாளித்துவ அரச இயந்திரத்தின் பாதுகாவலர் வேலையை பொறுப்பேற்றிருக்கும் ஜே.வி.பி.

சுனாமியின் பின்னர் சந்திரிக்கா மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக ஜே.வி.பி. க்கு தன்னுடைய பாதையை வெளிப்படுத்திக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவர்கள் உள்ளே படிப்படியாக கட்டியெழுப்பிக் கொண்டு வந்த நிலவரங்களை சந்திரிக்கா அம்பலப்படுத்தினார். உண்மையிலேயே இப்பொழுது சந்திரிக்காவுக்கும் ஜே.வி.பி.க்கும் இடையிலேயே வெளிப்படையான மோதல் ஏற்பட்டுள்ளது. விமல் வீரவன்ச போன்ற ஆட்கள் வேலைகளை சீர்குலைக்கும் ஒரு முட்டாள் கூட்டத்தினராக இருந்து வருகின்றனர் என சந்திரிக்கா குற்றஞ்சாட்டுகின்றார். மறுபுறத்தில், சந்திரிக்கா ஐக்கிய தேசியக் கட்சியின் அப்பட்டமான கொள்கைகளை செயற்படுத்தி வருகின்றார் என விமல்வீரவன்ச போன்வர்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். இந்த மோதல் இப்பொழுது வெளிப்படையாக அரசியல் அரங்குக்கு வந்துள்ளது. ரணில் சுயாதீனமான ஒரு கருத்தை அல்லது நடவடிக்கையை முன்வைக்காதிருந்த போதிலும் சந்திரிக்கா முதலாளித்துவ வர்க்கத்துக்கு பொருத்தமான ஒரு சவாலை முன்வைத்துள்ளார். அவர் ஒரே நேரத்தில் சிங்கள இனவாதத்தின் மீதும், தொழிலாளர் வர்க்கத்தின் மீதும் ஒரு தாக்குதலை தொடுத்துள்ளார். அந்த நிலையில் அவருக்கு எதிராக குரலெழுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஜே.வி.பி. க்கு ஏற்பட்டுள்ளது. இப்பொழுது விமல் வீரவன்ச போன்றர்கள் ரணிலை பார்க்கிலும் சந்திரிக்காவே தமது உடன் எதிரியாக இருந்து வருகின்றார் என்பதனை காட்ட முயற்சித்து வருகின்றனர். தமது அரசியல் அதிகாரப் போட்டியில் சந்திரிக்காவை ஒரு கைப்பொம்மையாக பயன்படுத்திக் கொள்ள முடியாது என்ற விடயத்தை அவர்கள் இப்பொழுது புரிந்து கொண்டுள்ளார்கள். அவருக்குப் பதிலாக அநுர பண்டாரநாயகாவை முன் நிறுத்தி தேசாபிமான புரட்சிச் சதியொன்றை செயற்படுத்துவதே ஜே.வி.பி. இன் தற்போதைய திட்டமாகும். இந்த கைப்பொம்மை தலைமைத்துவத்தின் பாத்திரத்தை வகிப்பதற்கு அநுர முழு மனதுடன் முன்வந்துள்ளார். அவர்கள் இப்பொழுது ஒரு புறத்தில் சிங்கள பௌத்த பிற்போக்குவாதத்தையும், மறுபுறத்தில் உலக முதலாளித்துவத்துக்கு எதிரான போலி எதிர்ப்பு கோஷங்களையும்

கொண்ட அரசியல் செயற்பாடொன்றை பகிரங்கமாக முன்னெடுத்து வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் இப்பொழுது இடம்பெற்று வரும் பல்வேறு மோதல் சம்பவங்களிலும் இந்த தேசாபிமான சக்திகள் சம்பந்தப்பட்டுள்ளன என ஒரே அடியாக கூற முடியாது. ஆனால், இச்சக்திகள் ஆத்திரத்தைத் தூண்டக் கூடிய பல்வேறு சம்பவங்களையும் மேற்கொண்டிருந்தார்கள் என்பதனை கூற முடியும். சுனாமி நிவாரணங்களின் கீழ் அவர்கள் முன்னெடுத்த செயல்பாடுகளும் ஆத்திரத்தைத் தூண்டக் கூடிய செயல்பாடுகளாக மாற்றமடைந்தன. திருகோணமலையிலும் திகாமடுல்லையிலும் அரச நிலங்களில் நிவாரண வீடுகளை அமைத்து அவற்றை மக்களுக்கு தற்காலிகமாக வழங்குவதற்கு அவர்கள் முயற்சித்தார்கள். இந்த வேலைத்திட்டத்துக்கு ஒரு சில அரசாங்க அதிகாரிகளின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கும் அவர்கள் முயற்சித்தார்கள். ஆனால் தமிழ், முஸ்லிம் மக்கள் அவர்களுடைய இத்தகைய முயற்சிகளை சீர்குலைத்து, அவர்களை விரட்டியடித்தார்கள். இத்தகைய நிலைமைகளுக்கு ஊடாக இராணுவத்துக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் மோதல்களை தூண்டிவிடுதற்கும் அவர்கள் முயற்சித்திருக்கக் கூடும். இத்தகைய நடவடிக்கைகளுக்கு ஊடாக இராணுவத்துக்கு உள்ளேயும் தமக்கு விசுவாசமான ஒரு சக்தியை உருவாக்கிக் கொள்வதற்கு அவர்கள் முயற்சித்து வருவதனை காண முடிகிறது. ஜே.வி.பி. உலக முதலாளித்துவத்தின் பொருளாதார மற்றும் சமூக யோசனைகளுக்கு எதிராக குரல் எழுப்பிய போதிலும் அந்த ஆர்ப்பாட்டத்துக்கு முதலிடமளிக்கும் உத்தேசம் அவர்களிடம் இல்லை. அதற்கு ஊடாக தொழிலாளர் வர்க்கத்தின் சமூக இயக்கமொன்றை கட்டியெழுப்பிக் கொள்வதற்கும் அவர்கள் முயற்சிக்கவில்லை. அதற்குப் பதிலாக தொழிலாளர் வர்க்கத்தின் சக்தியை பயன்படுத்தி சிங்கள மத்திய தர வர்க்கத்தினரை அடிப்படையாகக் கொண்ட இனவாத சக்தி ஒன்றை கட்டியெழுப்புவதே அவர்களுடைய நோக்கமாக இருந்து வருகின்றது. இந்த அடிப்படையிலேயே அவர்கள் ஆட்சியைப் பிடிக்க முயலுகிறார்கள். ஜே.வி.பி. உலகளாவிய முதலாளித்துவத்துக்கு எதிராக உரத்துக் குரலெழுப்பிய போதிலும் இறுதியில் இனவாத புரட்சிச் சதியொன்றை முன்னெடுப்பதற்கே முயன்று வருகின்றது என்பது இப்பொழுது தெளிவாகும். இத்தகைய புரட்சிச் சதி முயற்சிகள் இறுதியில் தொழிலாளர் வர்க்கத்தை ஒடுக்கும் ஒரு பொறியாகவே செயற்படும் என்பதனை உலக வரலாறு எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. தற்போதைய அழுகிய முதலாளித்துவ அரச இயந்திரத்தை பாதுகாத்துக் கொள்வதே தமது அடிப்படை நோக்கமாக

இருந்து வருகின்றது என்பதனை இப்பொழுது விமல் வீரவன்ச போன்றவர்கள் பகிரங்கமாக கூறி வருகின்றனர்.

### இந்தியாவின் தந்திரம்

இந்திய ஆட்சியாளர்களின் நிர்ப்பந்தம் காரணமாகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி. யுடன் ஒரு முன்னணியை அமைத்துக் கொள்வதற்கு முன்வந்தது. இது தொடர்பாக இந்தியா ஜே.வி.பி. க்கு உதவிகளை வழங்கியிருந்தது என்ற கருத்தை புறமொதுக்க முடியாது. இந்திய ஆட்சியாளர்கள் ரணில் அரசாங்கத்தின் வர்த்தக நடவடிக்கைகள் குறித்து பெருமளவுக்கு விரக்தியுற்றிருந்தனர். அதன் காரணமாக அந்த அரசாங்கத்தை நீக்கிவிட்டு சிறந்த விதத்தில் கொடுக்கல் வாங்கல்களை நடத்தக் கூடிய ஓர் அரசாங்கத்தை இலங்கையில் அமைப்பதற்கு இந்திய ஆட்சியாளர்கள் முன்வந்திருக்கக் கூடும். சோனியா அதிகாரத்துக்கு வந்த பின்னரும் கூட இக்கொள்கையில் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை. புலிகள் இயக்கம் தொடர்பாக இந்தியா வெறுப்புணர்வைக் கொண்டிருப்பதனால் ஜே.வி.பி. இன் கற்பனை தேசாபிமான அரசாங்கம் தொடர்பாக அவர்கள் தூண்டுதல்களை கூட வழங்க முடியும். தற்பொழுது கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் சம்பவங்களின் பின்னணியில் இந்தியாவின் கரம் இருந்து வருகின்றது என்ற கருத்தை நாங்கள் வெறுமனே ஒதுக்கிவிட முடியாது. கருணா அணி விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து செல்வதற்கு பல சமூகக் காரணங்கள் இருந்து வந்துள்ளன என்ற விடயத்தை நாங்கள் முன்னரேயே கூறியிருந்தோம். கருணா ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள் குறித்து பேசினார். ஆனால், அவர் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்த பின்னர் சிங்கள ஆட்சியாளர்களுக்கும் இந்திய ஆட்சியாளர்களுக்கும் இரையாகும் விதத்திலேயே தனது பயணத்தை மேற்கொண்டார். எனவே, அவருடைய இயக்கம் கரைந்து போவது ஓர் இயல்பான சம்பவமாகும். இதில் எஞ்சியிருப்பவர்கள் இலங்கை மற்றும் இந்திய ஆதரவுடனும், ஜே.வி.பி.இன் ஆசீர்வாதத்துடனுமே செயற்பட்டு வருகின்றார்கள். அவர்களுடைய கூற்றுக்களே அதனை எடுத்துக் காட்டுகின்றன. தமிழ் மக்களை ஒரு மாற்றுப் பாதையில் இட்டுச் செல்லக் கூடிய ஆற்றல் கருணா அணியினருக்கு உள்ளது என்பதனை பொறுப்புள்ள எந்தவொரு அரசியல் விமர்சகரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்.

**சமூகப் போராட்டத்திலிருந்து**

**தேசிய விடுதலையை பிரிக்க முடியுமா?**

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் உலக வல்லரசுகளிடமிருந்து தனக்கு ஏற்பட்டிருக்கும் அழுத்தங்கள் குறித்து புலிகள் இயக்கம் மகிழ்ச்சியடைய முடியாது. இறுதியில தமிழர் தாயகத்தை தமது பிடியில் எடுத்து வருவதற்கு உலக வல்லரசுகள் முயன்று வருவது தெளிவாகும். அவர்களுடைய சமாதானத்துடன் இணைந்த விதத்தில் கம்பனிகளும் தமிழர் தாயகத்துக்குள் ஊடுருவிக் கொண்டிருக்கின்றன. அதற்கு ஊடாக இலங்கை தமிழர்களின் தமிழ் அடையாளம், தமிழ் கலாச்சாரம் மற்றும் தமிழ் நாகரீகம் என்பவற்றை கட்டியெழுப்ப முடியுமா? அல்லது தமிழீழம் வெறுமனே அமெரிக்கர்களின் ஒரு கொல்லைப்புறமாகி விடுமா? தமிழர் விடுதலை போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர் யுவதிகள் இது குறித்து யோசிக்க வேண்டும். சமூகப் போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்தால் மட்டுமே பிரபாகரனால தமிழர் சுதந்தித்தை ஊர்ஜிதம் செய்து கொள்ள முடியும். இன்று பிரபாகரன் எதிர்கொண்டுள்ள சவால் கஸ்ட்ரோ சென்ற பாதையில் தனது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதா? அல்லது இஸ்ரலே் தலைவர்களை போல அமெரிக்க அடிவருடி முகாம் ஒன்றை அமைத்துக் கொள்வதா? என்பதாகும். தமிழர் விடுதலைப் பேராட்டம் இடையறாது ஒரு புரட்சிகரப் பாதையில் பயணித்தல் வேண்டும். உலக சோஷலிஸ சக்திகளுடன் இணைந்து தமது முன்னோக்கிய பயணத்தை மேற்கொள்வதற்கு அவர்கள் முடிவு செய்ய வேண்டும். தெற்கில் வாழும் சிங்கள உழைக்கும் வர்க்கத்துடன் மிக நெருக்கமான பிணைப்புக்களை அவர்கள் கட்டாயமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கருணா இறுதியில் அடக்கு முறையாளர்களின் முகாமில் தஞ்சம் புகுந்துள்ளார் எனக் கூறி அப்பிரச்சினையை வெறுமனே விட்டுவிட முடியாது. தமிழ் சமூகத்துக்குள் ஏற்றத்தாழ்வினை ஏற்படுவதற்கு எதிரான தமிழ் மக்களின் எதிர்ப்புணர்வு ஆரம்பத்தில் கருணாவின் கலவரத்துக்கு பங்களிப்புச் செய்திருந்தது. எனவே, புலிகள் இயக்கம் தேசிய போராட்டப் பாதையிலிருந்து சமத்துவத்தை எடுத்து வருவதற்கான போராட்டப் பாதையில் தனது பயணத்தை முன்னெடுத்து, உலக வல்லரசுகளின் அழுத்தங்களை முறியடிக்க வேண்டும். அதற்கென தமிழர் விடுதலைப் போராட்டத்தை தமிழ் சமூகத்தின் எல்லைகளுக்கு அப்பால் விரிவுபடுத்தி, முழு பிராந்தியத்தையும் அதிரச் செய்யும் ஒரு சமூகப் போராட்டமாக

மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் இந்த விடுதலைப் போராட்டம் பிற்போக்குத் தளம் ஒன்றுக்குள் வீழ்ந்துவிடும். அவ்வாறு நேரும் சந்தர்ப்பத்தில் அத்தோல்வி தமிழ் மக்கள் மீது மட்டுமன்றி நாட்டு மக்கள் அனைவர் மீதும் எதிர்விளைவுகளை எடுத்து வரும். விசேடமாக சிங்கள மக்கள் மீது அது பாரிய தாக்கங்களை எடுத்து வரும். கடந்த காலத்தில் தமிழ் மக்கள் பல்வேறு விதமான ஆர்ப்பாட்டங்களிலும் பங்கெடுத்துள்ளனர். பொங்கு தமிழ் போன்ற காட்சிப்படுத்தலுடன் கூடிய மக்கள் செயற்பாடுகள் இடம்பெற்றிருந்தன. இத்தகைய செயற்பாடுகளுக்கு இடமளிப்பதற்கு புலிகள் இயக்கம் மேற்கொண்ட முடிவு மிக முக்கியமானதாகும். இத்தகைய செயற்பாடுகள் புலிகள் இயக்கத்தினால் உருவாக்கப்பட்டவை எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், ஏதோ ஒரு வழியில் மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்யும் பொழுது ஜனநாயக சமூகத்தின் அதிகாரம் மேலும் பலம் பெறுகின்றது. புதிய கருத்துக்கள் வளர்ச்சியடைகின்றன. எனவே, மக்களின் அனைத்துச் செயற்பாடுகளிலும் தலை சிறந்த கருத்துக்களை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு இருந்து வருகின்றது என்பதனை நாங்கள் மறக்க முடியாது.

## தொழிலாளர் வர்க்கத்தின் புதிய அணி திரளல்

தென்னிலங்கையில் சிங்கள சமூகத்துக்கு மத்தியில் இனவாதத்துக்கும், உலக முதலாளித்துவவாதத்துக்கும் எதிரான ஒரு சமூக இயக்கம் மீண்டும் உருவாகிக் கொண்டிருக்கின்றது. 1980 இன் வேலை நிறுத்தத்தின் பின்னர் உழைக்கும் மக்கள் மத்தியில் ஒரு பாரிய இணைப்பு ஏற்படவில்லை. தொழிற்சங்க மட்டத்தில் அத்தகைய ஓர் ஒற்றுமை உருவாகவில்லையாயினும் இடதுசாரி சமூக இயக்கமொன்று விஜயகுமாரதுங்க மற்றும் ஐக்கிய சோஷலிஸ முன்னணி ஆகிய சக்திகளுக்கு ஊடாக அரசியல் அரங்கில் எழுச்சியடைந்தது. ஆனால், விஜயவின் பின்னர் அந்த இயக்கம் பலம் பெறவில்லை. தமிழ் சமூகத்திலும் அதற்கு இணையான விதத்தில் இயக்கங்கள் உருவாகியிருந்தன. இன்று ஓர் அரசியல் கூட்டு இல்லாவிட்டாலும் கூட தொழிற்சங்க ரீதியில் ஒரு மறுமலர்ச்சி எற்பட்டுள்ளது. "தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான உரிமையை கோரும் தொழிற்சங்க மையம்'' இதற்கான ஓர் ஆரம்பமாகும். இதில் அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த தொழிற்சங்கங்கள்

அடங்கியுள்ளன. வடக்கிலும் தெற்கிலும் பெருந்தோட்டப் பிரதேசங்களிலும் வேரூன்றியிருக்கும் ஒரு தொழிற்சங்க சக்தியாக இது உருவாக முடியுமா? அது குறித்து இன்னமும் எதனையும் கூற முடியாதுள்ளது. ஆனால், தேசிய சுதந்திரத்துடன் இணைந்த விதத்தில் சமூக நீதியை நிலைநாட்டிக் கொள்ள வேண்டுமானால் நாங்கள் அத்தகைய ஒரு சக்தியை கட்டியெழுப்பிக் கொள்வது அவசியமாகும். அமெரிக்காவினதும் அதே போல இந்திய ஆதிக்கச் சக்திகளினதும் தலையீடுகளை முறியடித்து, இலங்கையின் அனைத்துச் சமூகப் பிரிவுகளுக்கும் சமூக நீதியையும் விடுதலையையும் பெற்றுக் கொடுக்க வேண்டுமானால் அத்தகைய ஒரு சக்தியை கட்டியெழுப்பும் ஒரு திசையில் நாங்கள் எம்மை நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று உலகெங்கிலும் சமூக நீதி மற்றும் தேசிய சுதந்திரம் ஆகிய இரண்டும் இணைந்த ஒரு புதிய சக்தி உத்வேகம் பெற்று வருகின்றது. வெனிசூலா, உருகுவே பொன்ற நாடுகளிலும் அதே போல இந்திய உபகண்டத்திலும் இந்த எழுச்சிக்கான அடையாளங்கள் ஏற்கனவே தோன்றியுள்ளன. இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை உலக வல்லரசுகளிடமிருந்து சமூகத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கான போராட்டங்களிலிருந்து வேறுபடுத்த முடியாது. அமெரிக்காவாக இருந்தாலும் சரி இந்தியாவாக இருந்தாலும் சரி அன்னிய ஆட்சியாளர்கள் இலங்கை ஆட்சியாளர்களுக்கு உதவுவதன் இறுதி நோக்கம் அடக்கு முறையை எடுத்து வருவதாகும். அமெரிக்கா அதன் Courage கப்பலை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தைரியமூட்டும் பொருட்டு வழங்கவில்லை; மாறாக ஆட்சியாளர்களுக்கு தைரியமூட்டும் பொருட்டே அதனை வழங்கியது. நாங்கள் இதனை மறந்துவிட்டால் ஒரு பாரிய கஷ்டத்தில் விழுந்து விடுவோம்.

**நன்றி**

# இனங்களுக்கிடையே சமாதானத்துக்கான ஆய்வகம

எந்த ஒவ்வொரு இனத்தினதும், குறிப்பாக ஒடுக்கப்படும் தேசிய இனங்களினதும் அரசியல் நிலைப் பாடுகளை மற்றைய இனங்களின் மத்தியில் பேசுபொருளாக்குவது அவசியமாகய மேற்கொள்ளப்பட வேண்டிய பணியாக உள்ளது.

அதுவும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக சர்வதேச ஒத்துழைப்புடன் முயற்சிகள் நடைபெற்றுக் கொண் டிருக்கும் காலப்பகுதியில் இப்பணி மிகவும் அவசியமானதென்றே கருதுகி ன்றோம். காணப்படும் தீர்வுகள் இலங் கையில் வாழ்கின்ற அனைத்து இனங் களினது பிரச்சினைக்கும் தீர்வினைக் கொண்டுவருவதற்கு இப்பணி அவசியமாக உள்ளது.

அனைத்து இனங்களையும் இணைத்த ஒரு புலமைத்துவ செயல்பாட்டினாலேயே இத்தகைய பணியினை சாத்திய மாக்க முடியும்.

இனங்களுக்கிடையே சமாதானத் துக்கான ஆய்வகம் இப்பணிகளை செய்ய தன்னாலான வரை முயற்சிக்கும்

(1) <u>**நோக்கங்கள்**</u>

**01. பிரதான நோக்கங்கள்:-** ஒடுக்கப்படும் இனங்களின் அரசியல் நியாயப்பாடுகளை பேசுபொருளாக்குவதன் மூலம் இனங்களிடையே சமாதானத்தை உருவாக்குதல்.

**02. துணை நோக்கங்கள் :-**(அ) ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் அரசியல் செயற்பாடுகளை ஏனைய இனங்களின் மத்தியில் கொண்டு செல்லுதல். (ஆ) இனமுரண்பாட்டுக்கான அடிப்படைகளை அடையாளம் காணலும் அதனை தீர்ப்பதற்கான வழிவகைகளையும் கண்டறிதலும் (இ) ஒடுக்கப்படும் இனங்களின் அரசியல் நியாயப்பாடுகளை அனைத்து இனங்களும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தினை உருவாக்குதல்.

(ஈ) இனமுரண்பாடுகளை தீர்ப்பதற்கான சர்வதேச அனுபவங்களை பெற்றுக்கொள்ளுதல்

**(2) வேலைத் திட்டங்கள்** 01, கல்வி வட்டங்களை நடத்துதல் 02.சிறிய அளவில் இலகுவான மொழிநடையில் நூல்களை வெயிடுதல் 03.மக்கள் மததியில் சிறிய அளவிலான கருத்தரங்குகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் நடத்துதல் 04. கள ஆய்வுகைள நடத்துதல் 05, பல்வேறு இனங்கள் வாழும் கிராமங்களுக்கு நல்லெண்ண விஜயங்களை மேற்கொள்ளல்

இனங்களுக்கிடையே சமாதானத்துக்கான ஆய்வகம
143/4,கீயூ வீதி கொழும்பு .02 இலங்கை
தொலைபேசி.2430621, 2305329, தொலைமடல்.2305963
மின அஞ்சல்.recipe@visualnet.lk



*கலாநிதி. விக்ரமபாகு கருணாரத்ன*

'தமிழ்த தேசிய விடுதலைப்போராட்டமும் தென்னிலங்கை அரசியலின் இயலாமையும்' என்ற இந்நூலில் கலாநிதி. விக்ரமபாகு கருணாரத்ன இலங்கை மக்கள் சமுதாயத்தின உள்ளங்களில் ஏற்பட்டிருக்கும் புதிய சமுதாய வகுப்பின் முன்னேற்றம் தொடர்பாகவும் அந்தந்த வகுப்புகளின் சமூகத்தில் பல் வேறுபட்ட மட்டங்களின் வேறுபாடுகள் தொடர்பாகவும் தேடுதல்களில ஈடுபட்டுள்ளார். இதனூடாக இலங்கையின் அரசியலில் ஏற்பட்டுள்ள எதிர்கால வரலாற்றினை ஒன்றிணைக்கும் எதிர்கால வழியை எங்கள் முன் கொண்டு வருகிறார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மின்னியல் பொறியியலாளராக முதல் பட்டத்தை பெற்ற பின்னர் லண்டன் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் காந்த இலத்திரனியல துறையில் கலாநிதி. பட்டத்தை பெற்றார். பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட பொறியியல் துறை விரிவுரையாளராக கடமையாற்றியுள்ளார். கலாநிதி. விக்ரமபாகு கருணாரத்ன மார்க்சீயவாத சிந்தனையாளருமாவார். இந்த அடிப்படையில் தனது வாழ்வை நெறிப்படுத்தியுள்ளதோடு மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் தொழிலிலும் ஈடுபட்டுள்ளார். தற்போது நவ சமசமாஜ கட்சி, புதிய இடதுசாரி முன்னணியை முன்னெடுப்பதில் அவர் முன்னோடியாகத் திகழ்கின்றார். அதன் அரசியல் கொள்கைகளை தீர்மானிப்பதிலும் முன்னோடியாகத் திகழ்கிறார்.

நவீன உலகின் சிந்தனையாளர்கள் [illegible] மத்தியில் முக்கியஸ்தானத்தை வகிக்கு[illegible] கருணாரத்ன எங்கள் ஆய்வு நிலையத்தி[illegible] கருமங்களை மேற்கொண்டு வருகிறார்.

Poobalasingham Book Depot
Tamilth Thesiya Rs. 50.00
2016-05-13 B-03795